*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC.214/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW****- 3 (****LW****- 3)*

*Name / Father's Name:* ***திரு.வெங்கடேசன் த/பெ.சடையன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.*2023.

துவக்க நேரம் 11.25

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சின்னமாங்கோடு கிராமத்தில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள்.

2) எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மநதமாக பிரச்சனை இருந்து வந்தது. அதனால் நிலத்தை அளப்பதற்கு வி.ஏ.ஓ, சர்வேயர் ஆகியோர்களை அழைத்து அளந்துக்கொண்டோம்.

3) மறுநாள் எனது தம்பி லட்சுமணன் இருசக்கரவாகனத்தில் காட்டுவேலையை முடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபொழுது எதிரிகள் மூவரும் அவரை வழிமறித்து அடித்துவிட்டார்கள்.

4) எதிரி ஈஸ்வரன் கம்பியால் எனது தம்பியின் பின்னந்தலையில் அடித்துவிட்டார். எதிரி கோவிந்தன் தடியால் எனது தம்பியின் உடம்பில் அடித்துவிட்டார். எதிரி லட்சுமணனும் எனது தம்பியை அடித்துவிட்டார். நான் தடுத்தும் என்னால் எதிரிகளை தடுக்க முடியவில்லை.

5) மேலும் எதிரி ஈஸ்வரன் என்னையும், எனது தம்பியையும் தேவடியா மவனே, கண்டார ஓலி மவனே, உங்களை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி கொலை மிரட்டலும் விடுத்தார்.

6) எனது தம்பிக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலிசார் நடந்த சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எத்தனை வருடங்களாக எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலப்பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சுமார் 4-5 வருடங்களாக இருக்கும். எதிரிகள்தான் வி.ஏ.ஓ,

சர்வேயர் ஆகியோர்களுக்கு படிகட்டி நிலத்தினை அளந்தார்கள் என்றால் இல்லை.

2) எதிரிகளுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் எங்களுக்கும், எதிரிகளுக்குமிடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) எதிரி கோவிந்தனுக்கு அவரது தாத்தா வழியில் சொந்தமான இடத்தில் அவர்கள் பயர்செய்ததை அழித்துவிட்டு காட்டினை நாங்கள் ஓட்டிவந்தோம், அதனால்தான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல.

4) சம்பவம் எங்கு நடந்தது என்றால் எனது காட்டிற்கும், எதிரிகள் காட்டிற்கும் நடுவே செல்லும் வழியில் நடந்தது. சம்பவயிடத்தில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை.

5) எதிரிகள் அவர்களது காட்டிற்கு சென்று வரும்பொழுது நானும், எனது தம்பியும்தான் அவர்களிடம் சண்டைபோட்டோம் என்றும், அதிலிருந்து தப்பிக்கவேண்டி எதிரிகள் மீது பொய்யாக புகாரினை கொடுத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் சொல்லியுள்ளதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 11.42

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC.214/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW****- 4 (****LW****- 5)*

*Name / Father's Name: திருமதி.வனிதா  க/பெ.பாஸ்கர்*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of* 1873 *of the day of 20.07.*2023.

துவக்க நேரம் 11.43

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சின்னமாங்கோடு கிராமத்தில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகள் மற்றும் அ.சா.1 லட்சுமணன் ஆகியோர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) அ.சா.1 லட்சுமணன் குடும்பத்தாருக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மநதமாக பிரச்சனை இருந்து வந்தது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 1 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் மாலை நேரம் தண்ணீர் எடுக்க நான் சென்றபொழுது வழியில் எதிரிகளுக்கும், அ.சா.1 லட்சுமணனுக்கும் இடையே சண்டை நடந்து முடிந்திருந்தது.

3) யார் யாரை அடித்துக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. போலிசார் நடந்த சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 28.01.2021 ம் தேதி மாலை 04.30 மணியளவில் அ.சா.1 இலட்சுமணனை, எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டி, கம்பி, உருட்டுக்கட்டையால் அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதை நான நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகள் எனது பக்கத்து காட்டுகாரர்கள் என்பதால்

எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 11.49

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC.214/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**- 5 (**LW**- 6)*

*Name / Father's Name: திரு.பாஸ்கர் த/பெ.சடையன்*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2023.*

துவக்க நேரம் 11.50

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சின்னமாங்கோடு கிராமத்தில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகள் மற்றும் அ.சா.1 லட்சுமணன் ஆகியோர்கள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) அ.சா.1 லட்சுமணன் குடும்பத்தாருக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மநதமாக பிரச்சனை இருந்து வந்தது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 1 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் மாலை நேரம் எதிரிகளுக்கும், அ.சா.1 லட்சுமணனுக்கும் இடையே சண்டை நடந்ததாக எனது மனைவி வனிதா சொல்லி கேள்விப்பட்டேன்.

3) யார் யாரை அடித்துக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. போலிசார் நடந்த சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 28.01.2021 ம் தேதி மாலை 04.30 மணியளவில் அ.சா.1 இலட்சுமணனை, எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டி, கம்பி, உருட்டுக்கட்டையால் அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதை நான நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகள் எனது பக்கத்து காட்டுகாரர்கள் என்பதால்

எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.02

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.